பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**09 06 2026 TUESDAY 6.30 PM**

<u>மாநிலச்செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நதிகளை இணைப்பதன் மூலம் தண்ணீர் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

2. சேவை அடிப்படையிலான நிர்வாகம் மூலம் மத்திய அரசு சிறப்பாக செயல்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார்.

3. பெண்களின் பாதுகாப்புக்காக சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை திட்டத்தை முதலமைச்சர் திரு விஜய் இன்று சென்னையில் தொடங்கிவைத்தார்.

4. திருநெல்வேலி, கன்னியாகுமரி, கோவை, நீலகிரி உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. Dambulla-வில் நடைபெற்ற இலங்கை-ஏ அணிக்கு எதிரான முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், 8 ரன் வித்தியாசத்தில் இந்தியா ஏ அணி வெற்றிபெற்றது.

. . . இனி விரிவான செய்திகள் . . .

<<<<<<>>>>>>

நதிகளை இணைப்பதன் மூலம் தண்ணீர் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஜல்சக்தி அமைச்சகம் தொடர்பான திட்டங்களை ஆய்வு செய்த அவர், பாசன வசதிகளை விரிவுபடுத்துவதற்கும், வறட்சியை தவிர்க்கவும் நதிநீர் இணைப்பு வழிவகை செய்யும் என்று கூறியுள்ளார்.

தேசிய நலன் அடிப்படையில் நீர் மேலாண்மை திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மக்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் ஜல்சஞ்சய் திட்டம் மூலம், நிலத்தடி நீர் மேம்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இக்கூட்டத்தில், மத்திய ஜல்சக்தி அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல், இணையமைச்சர் டாக்டர் ராஜ்பூஷன் சௌத்ரி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>>

சேவை அடிப்படையிலான நிர்வாகம் மூலம் மத்திய அரசு சிறப்பாக செயல்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு பதவியேற்று 12 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளதையொட்டி, சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், அனைத்துத் துறைகளும் வளர்ச்சியடைந்து வருவதாக கூறியுள்ளார்.

டிஜிட்டல் மற்றும் நிர்வாக மறுசீரமைப்பு, தொழில்முனைவோருக்கான உகந்த சூழ்நிலையை உருவாக்குவது உள்ளிட்டவற்றில் அரசு நிர்வாகம் சிறப்பாக செயல்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏழை எளிய மக்களின்நலனுக்காகவும், மகளிர் மற்றும் இளையோருக்கு அதிகாரம் அளிப்பதில் அரசு உறுதிபூண்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

வரும் 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட கடந்த 12 ஆண்டுகளாக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய போதைப்பொருள் புழக்கத்தை முற்றிலும் ஒழிக்க வேண்டும் என்று முதலமைச்சர் திரு விஜய் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை திட்டத்தை தொடங்கிவைத்து பேசிய அவர், தனிமனித ஒழுக்கம் சரியாக இருந்தாலே இந்த சமூகம் மாறும் என்று கூறினார்.

***(Sound Byte — விஜய் - 50 Sec.)***

முன்னதாக, சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையினரின் அணிவகுப்பு மரியாதையை முதலமைச்சர் ஏற்றுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

அனைத்து நில **Survey** எண்களுக்கும் இம்மாத இறுதிக்குள் சந்தை வழிகாட்டி மதிப்பு இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

மாநில வணிக வரி மற்றும் பத்திரப் பதிவுத்துறை அமைச்சர் திரு. லோகேஷ் தமிழ்ச்செல்வன் தலைமையில் சென்னையில் இன்று ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இதுதொடர்பாக, மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பதிவுக்கு வரும் பொதுமக்களிடம் கண்ணியமாக நடந்துகொள்ளுமாறும், தாமதமின்றி அன்றைய தினமே ஆவணங்களை பொதுமக்களிடம் திரும்ப வழங்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டிட களப்பணிக்காக ஆவணங்களை உடனுக்குடன் பார்வையிட்டு வழங்கப்பட வேண்டும் எனவும், தேவையில்லாத காரணங்களுக்காக ஆவணங்களை நிலுவையில் வைத்து பொதுமக்களை அலைக்கழிக்க கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நிலுவை ஆவணங்களை மாவட்டப் பதிவாளர்கள் ஆய்வு செய்து, உடனுக்குடன் உரிய தீர்வு அளித்திட வேண்டும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில், அறநிலையங்கள் துறை செயலாளர் திரு குமரகுருபரன், பதிவுத்துறை தலைவர் திரு அருண் சுந்தர் தயாளன் உள்ளிட்ட பதிவுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடியின் நெதர்லாந்து பயணத்தின்போது மீட்கப்பட்ட நாகை மாவட்டம் ஆனைமங்கலம் செப்பேடுகளை தாயகம் கொண்டுவந்துள்ளதற்கு அப்பகுதி மக்கள் மத்திய அரசுக்கு நன்றி தெரிவிப்பதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

***(Voice Byte — செல்வன் ஜெபராஜ் - 52 Sec. )***

<<<<<<>>>>>>

திருநெல்வேலி, கன்னியாகுமரி, கோவை, நீலகிரி உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Sound Byte — வி ஆர் துரை - 42 Sec. )*

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உயர்கல்வி சேர்க்கை சார்ந்த வழிகாட்டல் மற்றும் ஆலோசனை தேவைப்படும் அரசு பள்ளி மாணவர்களுக்காக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உயர்கல்வி கட்டுப்பாட்டு அறை செயல்படும் என்று ஆட்சியர் திருமதி சினேகா தெரிவித்துள்ளார்.

--------------

திருவண்ணாமலை மாநகராட்சி பள்ளிகளில் மாணவர்களுக்கு வழங்கும் காலை உணவுத் திட்டத்தை மாவட்ட ஆட்சியர் திருமதி வந்தனா கார்க் நேரில் ஆய்வு செய்தார்.

---------------

மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி ஒன்றியத்துக்கு உட்பட்ட வஞ்சிநகரம் கிராமத்தில் சிப்காட் தொழிற்பேட்டை அமைப்பது தொடர்பாக, அலுவலர்களுடன் ஆட்சியர் திரு ஆகாஷ் தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

---------------

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் சுமார் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை ஆட்சி**யர்** திரு. மதுபாலன் இன்று ஆய்வு செய்தார்.

--------------------

வேலூர் அருகே தொரப்பாடியில் உள்ள சிறை மற்றும் சீர்திருத்த நிர்வாக பயிலரங்கத்தில் சிறை அதிகாரிகளுக்கான மூன்று மாதங்கள் பயிற்சி நிறைவுவிழா அதன் இயக்குநர் திரு பிரதீப் தலைமையில் இன்று நடைபெற்றது.

---------------

பெரம்பலூர் மாவட்டம், நூத்தப்பூர் கிராமத்தில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் நாளை நடைபெறவுள்ளது.

-----------------

சென்னை, திரு.வி.க. நகர் மண்டலத்தில் கட்டப்பட்டு வரும் பல்நோக்கு கட்டிடப் பணிகளை சென்னை மாநகர மேயர் திருமதி. பிரியா ஆய்வு மேற்கொண்டார்.

--------------

சென்னை மாநகர ஆணையர் டாக்டர் சமீரன், கோடம்பாக்கம் மண்டலத்தில் உள்ள இலவச ஒப்பனை அறையினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இலங்கை-ஏ அணிக்கு எதிரான முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், 8 ரன் வித்தியாசத்தில் இந்தியா ஏ அணி வெற்றிபெற்றது.

**Dambulla**-வில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா ஏ அணி, 50 ஓவரில், 6 விக்கெட் இழப்பிற்கு 277 ரன் எடுத்தது.

278 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய இலங்கை-ஏ அணி, 269 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

--------------

**இந்தியா - தஜுகிஸ்தான் இடையேயான இரண்டாவது மற்றும் இறுதி நட்புணர்வு கால்பந்துப் போட்டி இன்று நடைபெறுகிறது.**

**தஜுகிஸ்தானில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 8.30-க்கு தொடங்குகிறது.**

**<<<<<<END>>>>>>**